அசல்

6.3.35. ட. ஸ்ரீநிவாஸ ஐயர்

அசன் -1 (சதாபிஷேக வாழ்த்து)

கைம்மா றியற்றக் கடவேம்யா மல்லேங்காண்
மெய்யாம் முகில்நிகர்க்கும் மேலோய்நீ — வையகத்தில்
நாடோறு மாயு ளலம்வளர நற்றமிழ்க்காய்
நீடூழி வாழி நிலைத்து. (8)

முந்தை மறைவாழி முன்னூன் முனிவாழி
செந்தமிழ் வாழி திருவாழி — சந்ததமும்
தாமரைப்பூந் தார்மார்பன் சாமிநாதப் பேருடைய
மாமறையோன் வாழி மகிழ்ந்து. (9)

—

உ

1935-ம் வருஷம் மார்ச்சு மாதம் 6உ சென்னை மாநகரில் தமிழபி
மானிகளான நம்நாட்டுப் பிரமுகர்களாற் கொண்டாடப்பெறும்
ஸ்ரீமத் மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி. டாக்டர்,
பிர்ஹ்மஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களின் 80வது ஆண்டு
நிறைவு விழா வைபவத்தின் சார்பாக, அருந்தமிழ் வளர்த்து
வரும் மஹோபகாரியான ஐயரவர்கள் திறத்து,

பாலக்காடு, அரசாங்க விக்டோரியா கலாசாலைத்
தமிழாசிரியர் L. ஸ்ரீநிவாஸ ஐயர் ஸமர்ப்பித்த

இயன்மொழிவாழ்த்துப் பாமாலை.

(வெண்பா)

செந்தமிழ் நூல்கள் சிதலைவாய்ச் சேராமே
வந்தெடுத்து வாழ்வளித்த வள்ளலும் — கொந்தவிழ்தார்ப்
பூமிநாதர் போற்றும் புலவர் பெருந்தகையாம்
சாமிநா தையரென்பர் தாம்.. (1)

திருமுறை கண்டநஞ் சென்னியர்கோன் சங்கத்
தருமுறை நூல்களழி யாதோர் — உருவுறவே
சாமிநா தையனெனுந் தக்கோனாய் வந்தனன்காண்
பூமிசெய்த புண்ணியமே போல். (2)

சிந்தா மணியுஞ் சிலப்பதி காரமும்
நந்தா மணிமே கலையும்நம் — விந்தைதவழ்
கொங்குவேள் மாக்கதையுங் கூறுவதும் நாமெங்கே
இங்கிவன்றன் னின்னருளின் றேல். (3)

பத்துப்பாட் டோடு பரவுதொகை நூல்பலவும்
எத்திக்கி னுந்தேடி யேகொணர்ந்து — வித்தி
விளைத்தவா போல விளங்க விரித்தாயுன்
வளமதை யென்சொல்வேன் மற்று. (4)

கைம்மாறு நோக்காது கல்விக் கடல்குடித்து
மெய்யாங் கலைவளர்க்கும் மேன்மையினால் — வையகத்தே
நீர்மேவு சாமிநா தையபூ தேவனைக்
கார்மேக மென்றேன் களித்து. (5)

சங்கத் திருப்பதினால் சற்குருவாய் வந்ததினால்
துங்கத் தமிழ்வளர்க்குந் தாய்மையினால் — பொங்குபுகழ்ச்
சாமிநாதப் பேரதனால் தக்கோ. யுனைமுருக
னாமெனவே சொன்னே னறிந்து. (6)

பொன்னே கொடுத்தாலும் பூமி கொடுத்தாலும்
என்ன கொடுத்தாலு மென்பயன்காண் — மன்னுந்
தமிழ்நூல்க ளென்னுந் தனியமுதந் தந்தாய்க்
கிமிழ்நீ ருலகில்நே ரில். (7)